# கிறிஸ்துவின் சரீரம்

*சபையைச் சித்தரிப்பதில் வேதவசனங்கள் ஏவப்பட்ட பல உருவகங்களைப் பயன்படுத்துகின்றன. அந்த நிறுவனத்தைப் பற்றிய நமது பெரும்பான்மையான தகவல்களுக்கு நாம் இந்த உருவகங்களையே சார்ந்துள்ளோம். அவைகளில்லையென்றால் நாம் (சபை பற்றிய அறிவில்) வறியவர்களாகவே இருப்போம். சபையைச் சித்தரிப்பதில் உதவியாக மனித உடலைத் தேர்ந்தெடுத்ததில், ஏவுதலானது மாபெரும் எளிமையும் அதே வேளையில் மாபெரும் ஆழமும் கொண்ட உதாரணத்தை தேர்ந்து கொண்டது என்று காணப்படுகின்றது. இந்த ஒப்புவமையில் மூன்று தனிச் சிறந்த சத்தியங்கள் ஆலோசிக்கப்படுகின்றன.*

## சபையுடன் கிறிஸ்துவுக்குள்ள உறவு

*சபையுடன் உள்ள உறவில், கிறிஸ்து தலையாக இருக்கின்றார். இந்த உருவகமானது எபே. 1:22, 23 மற்றும் கொலோ. 1:18, 24 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வசனப் பகுதிகள் கிறிஸ்துவே சபையின் தலை என்று வலியுறுத்துவது மட்டுமின்றி, முதலில் குறிப்பிட்ட வசனப் பகுதியானது அவர் எப்பொழுது தலையாக ஆனார் என்பதையும் குறிப்பிடுகின்றது: அவர் உயிர்த்தெழுந்து, உயர்த்தப்பட்ட பிறகு சபையின் தலையானார். பலர் நினைக்கின்றபடி, கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்பே சபை இருந்திருந்தால், அது தலையற்ற ஒரு உடலாகத்தான் இருந்திருக்கும். இது, ஆபிரகாம் அல்லது யோவான் ஸ்நானன் காலத்தில் சபை நிலைநாட்டப்பட்டது என்ற தவறான கருத்துக்களை மறுப்பதாயிருக்கின்றது. கிறிஸ்து தமது உயிர்த்தெழுதலுக்குப் பிறகுதான் சபைக்குத் தலையானார் என்று இந்த வசனப் பகுதி போதிக்கின்றது; மற்றும் இதை நாம் இன்னும் முழுமையாக ஆராயும் பொழுது, இது அவர் உயிர்த்தெழுந்த பின் ஐம்பது நாள் கழித்து வந்த பெந்தெகொஸ்தே நாளன்று நடந்தது என்று அறிகின்றோம் (அப். 2). இதுதான் சபை பிறந்த நாள் ஆகும். அந்த நாளில் கிறிஸ்து அந்த சரீரத்தின் மீதான தம்முடைய மத்தியஸ்த ஆளுகையைத் தொடங்கினார்.*

*கிறிஸ்துவின் தலைமைத்துவம், அவரது ஆளுகை மற்றும் ஆட்சித்துவம் ஆகியவை, அதிகாரமுடைமை மற்றும் அரசாங்கம் ஆகியவற்றின் கருத்துக்களை மிக நுண்ணிய வழிமுறையில் ஆலோசனையாகக் கொடுக்கின்றன. மத். 28:18ல் அவர் உரிமைகோரியபடி, சகல அதிகாரமும்*

*உள்ளவராய் இருக்கின்றார் என்று இது தெரிவிக்கின்றது. தலையாக இருந்து, அவர் சபை மீது ஆளுகை செய்கின்றார். இந்த அரசு முழுமையான முடியாட்சி என்ற வகையைச் சேர்ந்ததாகும்.*

*இந்த முடியாட்சியின் முழுமைத்துவம் என்பதே இதன் தனிச்சிறந்த பண்பாக உள்ளது. சபையின் தலையானவர் ஞானத்திலும் அன்பிலும் முழுமையானவராய் இருக்கின்றார்; அவர் தவறுகள் எதுவும் செய்வதில்லை. நமது மத விஷயங்கள் எல்லாவற்றிலும் நாம் அவரையே அதிகாரத்தின் நிறைவான குரலாக நோக்க வேண்டும். நாம் சபையினிடமோ, நமது மனச்சாட்சியினிடமோ, மோசேயினிடமோ அல்லது பாரம் பரியத்தினிடமோ போக முடியாது.*

*பேதுருவே சபைக்குத் தலைவராயிருந்தார் என்று நிரூபிப்பதற்குப் பாடுபட்ட ஒருவருடைய பேனாவிலிருந்து புறப்பட்ட நீளமான ஒரு விவாதத்தை நான் படித்தேன். பேதுருவும் அவரது வழி வந்தவர்களுமே சபையின் தலைவர்கள் என்று நிரூபிக்க அவர் மாபெரும் விபரங்கள் தந்து முயற்சி செய்தார். தலை ஒன்று தேவை என்பது அவரது விவாதங்களில் ஒன்றாக இருந்தது. சபைக்கு ஒரு தலை தேவை என்பதையோ, அல்லது சபை தலை ஒன்றைப் பெற்றுள்ளது என்பதையோ நாம் மறுப்பதில்லை. இருப்பினும், கிறிஸ்துவின் சபை மீது மனிதத் தலை(வர்) ஒன்று எப்பொழுதாவது வைக்கப்பட்டிருந்தது என்ற கருத்தையே நாம் அதிக திட்டவட்டமாக மறுக்கின்றோம். கிறிஸ்துவே இதன் ஒரே தலை(வரா)யாக இருக்கின்றார். அவர் ஏவப்பட்ட தம் தூதர்களின் மூலமாக/ ஸ்தானாபதிகளின் மூலமாகப் பேசியிருக்கின்றார் (2 கொரி. 5:20), அவர்களின் வழித்தோன்றல்கள் என்று யாரும் இல்லை.*

*கிறிஸ்துவே சபையின் தலையாக இருக்கின்றார் என்று அறிதலானது ஒவ்வொரு தனி நபரின் சிந்தையிலும் சபையை உயர்த்த வேண்டும். கிறிஸ்து தலையாக உள்ள ஒரு நிறுவனமானது தனிச் சிறப்பற்றதாக இருக்க முடியாது. அவர் தலையாக இருக்கின்றார் என்ற உண்மையே அதன் மாபெரும் முக்கியத்துவத்தைக் காண்பிக்கின்றது. கிறிஸ்து தலையாக உள்ள ஒரு உடலில் உறுப்பாக இருப்பது என்பது எவ்வளவு மகிமைக்குரியதாய் இருக்கின்றது!*

*தலையே உணர்வு மற்றும் அறிதல் ஆகியவற்றின் மையமாக இருக்கின்றது. உடலினால் செய்யப்படும் எதுவும் அங்கு (தலையில்) உணரப்படுகின்றது. நாம் சபையை மகிமைப் படுத்தும் போது/ கனப்படுத்தும்போது, அதன் தலையையும் நாம் கனப்படுத்துகின்றோம்; நாம் சபையைக் கனவீனப் படுத்தும் போது, அதன் தலையையும் நாம் கனவீனப் படுத்துகின்றோம். நியாயத்தீர்ப்பின் காட்சியாகிய மத். 25ம் அதிகாரமானது இந்தக் கூற்றின் முந்திய பாகத்தை நிரூபிக்கின்றது. இந்த பூமியில் கிறிஸ்துவின் சகோதர சகோதரிகளுக்கு ஊழியம் செய்வதென்பது அவருக்கே ஊழியம் செய்வதாகும். அப். 9:4ல் சவுலுக்கு இயேசு கூறிய கூற்றானது பிந்திய பகுதியை நிரூபிக்கின்றது: சபையைத் துன்பப்படுத்துவது என்பது கிறிஸ்துவைத் துன்பப்படுத்துவதாகும். சபையைப் பற்றி நாம் பேசும் வகையைப் பற்றி நாம் எச்சரிக்கையாய் இருப்போம்! நாம் அதை*

*கருதுகின்ற வகையிலும் எச்சரிக்கையாய் இருப்போம்!*

## கிறிஸ்தவர்களுடன் கிறிஸ்துவுக்குள்ள உறவு

*சபையென்ற பாடக்கருத்தைக் காட்டிலும் அதிகமான தவறான புரிந்து கொள்ளுதலுக்குக் காரணமான பாடக் கருத்து வேறு எதுவும் அநேகமாக இருக்காது. சபை தொடர்பான தவறான கருத்துக்கள் பெரும்பாலானவை, அது என்ன என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுவதினாலேயே எழுகின்றன.*

*சபைக்கான ஒரு சொற்பொருள் விளக்கத்தை நாம் நாடுவோம். இது கிறிஸ்துவின் சரீரமாக இருக்கின்றது (எபே. 1:22, 23). இது மக்களால் ஆன ஒரு சரீரமாகவே இருக்கின்றது, ஆனால் என்ன வகையான மக்கள்? இரட்சிக்கப்பட்ட மக்கள் (அப். 2:47) - புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள். இவ்விதமாகவே, சபை என்பது, இரட்சிக்கப்பட்ட ஆளுகை செய்கின்ற மக்களாலான ஒரு உடலாக இருக்கின்றது. சபை பற்றிய இந்தப் பொருள் விளக்கமானது சபையின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.*

*சபையானது இரட்சிக்க முடியும் என்பதைச் சிலர் நம்புவதில்லை. அவர்கள் சொல்வது சரியே. இது இரட்சகராயிருப்பதில்லை; கிறிஸ்துவே இரட்சகராய் இருக்கின்றார், அவர் மட்டுமே இரட்சிக்க முடியும். அவர் எதை இரட்சிக்கின்றார்? சரீரத்தை இரட்சிக்கின்றார் (எபே. 5:23).*

*இன்னொரு தவறான புரிந்து கொள்ளுதலானது, சபையின் முக்கியத்துவம் பற்றியும், அதில் ஒரு உறுப்பினராய் இருப்பதின் அவசியத்திலும் காணப்படுகின்றது. சரீரத்தில்தான் ஒப்புரவு உள்ளது என்ற பவுலின் கூற்றில் (எபே. 2:16) சபையின் அவசியத் தேவையானது காணப்பட முடியும். சபைக்குப் புறம்பே மனிதர் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட முடியாது.*

*உடலுக்குப் புறம்பே உயிர் வாழ்க்கை இல்லை. தலையுடன் ஒருமைப்பட்டிருக்க, ஒருவர் உடலுக்குள் இருக்க வேண்டும். எவரொருவரும் உடலுக்கு வெளியே இருந்து கொண்டு தலையுடன் இணைக்கப்பட்டவராய் இருக்க முடியாது. ஆம், ஆவிக்குரிய வாழ்வை ஒருவர் பெற வேண்டுமென்றால், அவர் சபைக்குள்ளாக இருக்க வேண்டும். இரட்சிக்கப்படுவதற்கு நீங்கள் சபையில்தான் இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல என்ற போதனை/உபதேசம் தவறானதாகும்.*

## கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள உறவு

*எபே. 4:16 வசனப் பகுதியில் சபையானது பல உறுப்புக்களைக் கொண்ட ஒரு மனித உடலாகச் சித்தரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு உறுப்பும் முக்கியமானதென்றும், ஒவ்வொன்றிற்கும் ஒரு பணி உள்ளதென்றும் இந்த உருவகம் காட்டுகின்றது. மனித உடலில் பல உறுப்புக்கள் இருப்பது போலவே - அவை ஒவ்வொன்றிற்கும் முழு உடலையும் ஆதரிப்பதில் பங்களிக்கும் தனித்தனிப் பணிகள் இருப்பது*

*போலவே - கிறிஸ்துவின் சரீரத்தைச் சார்ந்தவர்களாகிய நாமும் வித்தியாசப்பட்ட பணிகளைப் பெற்றிருந்தும் ஒரே சரீரத்தைச் சார்ந்தவர்களாயிருக்கின்றோம் (1 கொரி. 12:25, 26). ஒவ்வொரு உறுப்பும் அது கொண்டுள்ள இடத்திற்கு அவசியமானது, ஒவ்வொன்றும் முழு உடலுக்கும் பயன் நிறைந்ததாக இருக்கின்றது. ஒவ்வொருவருக்கும் மற்றவர் தேவையாயிருப்பதால், ஒவ்வொருவரும் தத்தமது பணியை நிறைவேற்ற வேண்டும், அதையும் தம்மை உயர்த்தாமலும், அடுத்தவரைத் தாழ்த்தாமலும் நிறைவேற்ற வேண்டும். உறுப்பினர்களின் மத்தியில் அகங்காரமோ, விரோதமோ இருக்கக் கூடாது.*

*உடலின்/சரீரத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் ஆர்வமும் அக்கறையும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஒருவர் பாடுபடும் பொழுது, எல்லாரும் பாடுபடுகின்றனர். சரீரத்தின் ஒரு உறுப்பு வியாதிப்படும் பொழுது, சரீரம் முழுவதுமே ஊனப்படுகின்றது. மற்ற உறுப்பினர்களின் வல்லமையானது அதன் நல்நிலைக்குக் கொண்டு வருவதில் ஒருமுனைப்படுத்தப்பட வேண்டும். ஒரு சகோதரர் விழுந்து போகின்ற போது, நாம் அதைக் குறித்து எவ்வித மாறுபாடும் இன்றி இருந்து விட முடியாது. அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை என்று சுட்டிக்காட்டுவது போல நாம் பேசக் கூடாது. தவறு செய்யும் உறுப்பினர் மீது சபை முழுவதும் இணைந்து அக்கறை, ஆலோசனை மற்றும் ஜெபங்கள் ஆகியவற்றை ஒருமுனைப்படுத்த வேண்டும். ஒரு உறுப்பினருக்கு எதிர்ப்பு ஏற்படும்போது, உபத்திரவப்படுவரை நோக்கி மற்றவர்களின் இரக்க உணர்வு பாய வேண்டும். அது போலவே, இன்னொருவர் அகம் மகிழ்ந்தால், நாம் யாவரும் அகம் மகிழ வேண்டும். இது எல்லா விரோதத்தையும் விலக்கி விடும். சரீரத்தின் ஒரு உறுப்பினர் பெறும் நல்லதிர்ஷ்டம் அல்லது வெற்றியினால் ஒருபொழுதும் மகிழ்ச்சியின்மை ஏற்படக் கூடாது. ஒரே சரீரத்தின் உறுப்பினர் என்பதைப் பண்பாகக் காட்ட வேண்டிய அருகாமை, ஆர்வத்தை அடையாளம் காணுதல், ஆத்துமாக்களைத் தேற்றுதல், ஒரே சிந்தை ஆகியவற்றை நாம் அனுபவிக்கின்றோமா?*

## *முடிவுரை*

*கிறிஸ்து தம் சபையுடனும், அதன் உறுப்பினர்களுடனும் கொண்டுள்ள உறவைப் பற்றிய மூன்று பாடங்கள் நிலைநிற்கின்றன. நாம் கிறிஸ்துவின் சரீரமான, சபையில் இருந்தால் கிறிஸ்து நமது தலையாகவும், நமது வாழ்வின் கர்த்தராகவும் இருக்கின்றார். அவருடன் ஒன்றுபட்டிருப்பதற்கு நாம் அவருடைய சரீரத்திற்குள்ளாக இருக்க வேண்டும், மற்றும் அந்த சரீரத்தின் உறுப்பினர்களுக்குள் ஒருமைப்பாடும் ஒற்றுமையும் இருக்க வேண்டும். கிறிஸ்து நமக்கு மேலாக இருக்கின்றார்! நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றோம்! நாம் ஒருவருக்கொருவர் உறுப்புக்களாய் இருக்கின்றோம்! கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக இருக்கும் யாவருக்கும் இந்தக் கூற்றுகள் உண்மையாய் இருக்க வேண்டும்.*